1986 மே 14]

வங்கித் திட்டத்திற்கான ஒப்பந்தம் பிப்ரவரி 1985-ல் அறுதியிடப்பட்டது. இது 4½ ஆண்டுக் காலத்தில் தமிழ்நாடு முழுவதும் நிறைவேற்றப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

(முற்பகல் 9—30)

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, உலக வங்கியின் உதவி மூலம் பல ஜில்லாக்களில் பல கோடி ரூபாய்க்கான திட்டங்களைத் தயாரித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்கேயெல்லாம் தண்ணீர் இல்லாமல் இருக்கிறதோ, அங்கேயெல்லாம் போர் போடுகிறார்கள். கிரவுண்ட் வாட்டர் பெயில்யூர் ஆகிவிடுகிறது. எனவே, கூட்டு குடிநீர்த்திட்டத்தை காம்ப்ரஹென்சிவ் ஸ்கீம் என்ற முறையில் எங்கேயெல்லாம் அமுல் நடத்த வேண்டுமென்று மக்கள் கேட்கிறார்களோ, அங்கேயெல்லாம் இத்திட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, அமுல் நடத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, உலக வங்கியின் மூலமாகத்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதில்லை. அதற்கு பல்வேறு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்ற அமைப்புகளின் மூலம் கடனுதவி பெற்று இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் கூட்டுக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுவதில், குடிநீர் வடிகால் வாரியம் மிகுந்த ஆர்வத்துடன் செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

திரு ச. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி, கொங்கனாபுரம், மகுடம்சாவடி போன்ற பகுதிகளுக்கு குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த இருப்பதாக ஏற்கனவே இந்த அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள், இந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது? விரைவில் பரிசீலனை செய்து, இந்தத் திட்டத்தை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதுபற்றி இப்போது தகவல் இல்லை.

இராமுத்தேவன் பட்டியில் மாதிரிப் பண்ணைகள்.

746 (*வினா எண். 7869) திரு. வி. பாலசிருஷ்ணன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதி, இராமுத்தேவன்பட்டி கிராமம் அருகே வேளாண்மைப் பல்கலைக் கழகம் மூலம் ஆராய்ச்சி மையங்கள், மாதிரிப் பண்ணைகள் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலைகள் தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி தொகுதி, இராமுத்தேவன்பட்டி கிராமம் அருகே விவசாயப் பல்கலைக் கழகம் ஆராய்ச்சி மையங்கள், மாதிரிப் பண்ணைகள் அமைக்க ஆராய்ச்சி நடத்தியதாக அறிகிறேன். இந்த நிதி ஆண்டிலாவது அந்த ஆராய்ச்சி மையங்களையும், மாதிரிப் பண்ணைகளையும் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்தில் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் ஒரு ஆராய்ச்சி பண்ணை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய அமைத்த குழு, ஏழு இடங்களை பார்வையிட்டு, மேற்படி பண்ணையை சேவல்பட்டியின் பக்கத்தில் அமைக்க 500 ஏக்கர் பரப்பளவில் கால்நடை, தீவனப் பயிர் மற்றும் விவசாயம், தோட்டக்கலை, வனப் பயிர் சம்பந்தமான ஆராய்ச்சிகளைத் தொடங்கலாம் என்று சிபாரசு செய்துள்ளது. ஆனால், நடப்பு ஐந்தாண்டு திட்டத்தில் தகுந்த நிதி ஒதுக்கீடு இல்லாததால் அந்தத் திட்டத்தை உடனடியாகத் தொடங்குவதற்கில்லை. போதிய நிதி வசதி கிடைக்கும்போது அது தொடங்கப்படும்.

திரு. கா. செ. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலமாக ஆராய்ச்சி மையங்கள், மற்றும் மாதிரிப் பண்ணைகள் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன? புதிதாக எங்கெங்கு துவக்கப்பட இருக்கின்றன? எல்லா மாவட்டங்களிலும் மாதிரிப் பண்ணைகளை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

பருத்தி விலை.

747 (*வினா எண் 9074) திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் பயனுறும் வகையில் பருத்தி விலையை உயர்த்தித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இல்லை.